# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2024.02.13 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்தம்

*(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினைத் திருத்தியமைப்பதற்கானதொரு சட்டமூலம்**

*கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ உதய கம்மன்பில அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாவது திருத்தம்

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப் பினைத் திருத்தியமைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை

இதன் பின்னர் 13 ஆம் திருத்தம் எனக் குறிப்பிடப்படும் 13 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம்:

(அ) ஒன்பதாம் அட்டவணை முதலாம் பட்டியல் முதலாம் பிற்சேர்க்கை 12:1 விடயத்துடன் சோத்து வாசிக்கப்பட வேண்டிய 154எ(8) உறுப்புரைக்கு அமைவாக பிழைகள் தவிர்க்கப்படல், வெளிக்கொணரப்படல் மற்றும் அவை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளல் உள்ளிட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றிய சட்ட உருவாக்கம் மற்றும் பாராளுமன்றினால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டங்களை அறிமுகம் செய்தலும் மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள காரணத்தினாலும்;

(ஆ) ஒன்பதாம் அட்டவணை முதலாம் பட்டியலில் முதலாம் பிற்சேர்க்கை 11:1 விடயத்திற்கு ஏற்ப பொலிஸ் மாகாணப் பிரிவின் தலைவராகிய பிரதிப் பொலிஸ் மா அதிபர் பொலிஸ் அதிகாரங்களை செயல்படுத்துல் தொடர்பாக குறித்த அந்த மாகாண முதலமைச்சருக்கு வகைகூற வேண்டியிருப்பதுடன் அவரின் நிர்வாகத்தின்கீழ் இருக்க வேண்டியிருப்பதனாலும்;

(இ) 155எ(1)(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய ஒன்பதாம் அட்டவணையின் முதலாம் பட்டியலில் முதலாம் பிற்சேர்க்கையில் 4,6 மற்றும் 9:1 விடயங்களுக்கு ஏற்ப மாகாண பொலிஸ் ஆணைக்குழு வின் உறுப்பினர்கள் மூவருள் இருவர் மாகாண முதலமைச்சரின் பெயர் முன்மொழிவு அல்லது இணக்கப் பாட்டுடன் நியமிக்கப்படல் வேண்டியிருப்பதனால் பொலிஸ் மாகாணப்பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் கள் சேர்த்துக் கொள்ளப்படல், இடமாற்றம் செய்யப்படல், பதவி உயர்வு வழங்கப்படல் மற்றும் ஒழுக்கம் தொடர் பான நிர்வாகத் தத்துவம் வழங்கப்பட் டுள்ள மாகாண பொலிஸ் ஆணைக்குழு அரசியல்மயப்பட்டிருப்பத னாலும்;

(ஈ) ஒன்பதாம் அட்டவணை முதலாம் பட்டியல் முதலாம் பிற்சேர்க்கையில் 11 ஆம் விடயத்திற்கு ஏற்ப ஏதேனும் மாகாணம் ஒன்றில் சேவை புரியும் தேசிய பிரிவின்

பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த அந்த மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கட்டளை மற்றும் நிர் வாகத்தின் கீழ் கடமை புரிய வேண்டியிருப்பதுடன் குறித்த அந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் உரித்தான அந்த மாகாண முதலமைச்சருக்குப் பொறுப்புக்கூற வேண்டி யிருப்பதுடன் அவரின் பரிபாலனத்தின்கீழ் இருக்க வேண்டியிருப்பதனாலும்;

(உ) ஒன்பதாம் அட்டவணையின் முதலாம் பட்டியலில் முதலாம் பிற்சேர்க்கையில் 12:2, 12:3 மற்றும் 12:4 ஆகிய விடயங்களுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 10:1 விடயத்திற்கு ஏற்ப ஏதேனும் ஒரு மாகாணத்தில் கடமை புரிகின்ற தேசிய பிரிவு பொலிஸ் அலுவலர்கள் பொதுவாக சாதாரண உடை அணிந்து இருக்க வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு சீருடை அணிவதற்கு இயலு மாவது மாகாணத்திற்குள் பொதுமக்கள் தொடர்பாக அமைதியை நிலைநாட்டுவதற்காக முதலமைச்சரினால் தேசியப் பிரிவின் உதவியைக் கோரும் சந்தர்ப்பம் ஒன்றில் அல்லது மாகாணத்திற்குள் அவசர நிலைமை ஒன்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றதொரு சந்தர்ப்பம் அல்லது முதலமைச்சரின் கோரிக்கைக்கு அமைவாக குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் ஏதேனும் ஒரு குற்றம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப் படுகின்றதொரு சந்தர்ப்பம் அல்லது முதலமைச்சருடன் கலந்து பேசி சட்ட மா அதிபரின் அங்கீகாரத்துடன் குற்றமொன்று தொடர்பாக விசாரணை ஒன்றினை மேற் கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரினால் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு கட்டளையிடும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் என்பதனாலும்;

(ஊ) ஒன்பதாம் அட்டவணையின் முதலாம் பட்டியலின் முதலாம் பிற்சேர்க்கை 12:1 விடயத்திற்கு ஏற்ப அங்கு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குற்றம் தவிர்ந்த அனைத்துக் குற்றங்களையும் தவிர்த்தல், வெளிக் கொணரப்படல் மற்றும் அது தொடர்பாக விசாரணை மேற் கொள்ளப்படல் தொடர்பாகவும் குற்றவியல் நடவடிக்கை

முறைச் சட்டக்கோவையின் பிரகாரம் சட்ட மா அதிபரின் அதிகாரங்களுக்கு அமைவாக அவ்வாறான குற்றங்கள் தொடர்பாக உரிய நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்தல் சம்பந்தமான அதிகாரமும் மாகாண பொலிஸ் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள காரணத்தினாலும்;

(எ) ஒன்பதாம் அட்டவணையின் இரண்டாம் பட்டியலின் இரண்டாம் விடயத்தில் (ஓ) பந்தியில் காட்டப்படும் கட்டுப் படுத்தல்களுக்கு அமைவாக ஏதேனும் ஒரு மாகாணத்திற் குரிய பொலிஸ் படைக்குரியதான அதிகாரங்களை பிரிதொரு மாகாண சபைக்கு வியாபிப்புச் செய்ய முடியு மாக இருப்பது குறித்த அந்த மாகாண சபையின் விருப் பின் மீது மாத்திரமாகும் என்பதனாலும்;

இந்திய அரசிலயமைப்புச் சட்டத்தின் 256 மற்றும் 257 பிரிவுகளுக்கு அமைய ஏதேனும் ஒரு பிராந்திய அரசு குடியரசிற்கு எதிராக செயற்படும் சந்தர்ப்பத்தில் அதில் தலையீடு செய்வதற்கு குடியரசிற்கு சட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் 13 ஆம் அரசியல் அமைப்புத் திருத்தம் இந்திய அரசியலமைப்பு கட்டமைப்பினை அடிப் படையாகக் கொண்டிருப்பினும் 154 (ஓ) உறுப்புரையில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட விதிப்பிரமாணங் களைத் தவிர அவ்வாறான ஒழுங்குவிதிகள் போதுமான அளவில் உள்ளெடுக்கப்படவில்லை என்ற காரணத் தினாலும்:

சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான மாகாண சபை தத்துவங்கள் செயற்படுத்தப்படுவது குடியரசின் தேசிய பாதுகாப்பிற்கு பார தூரமான அச்சுறுத்தல் என்பதனாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், அரசியலமைப்புக்கான 22 ஆம் திருத்தச் சட்டம் எனக் குறிப்பிடப்படுமாக.

அரசியலமைப்புச் சட்டத்தின் 155எ அரசியலமைப்பு மற்றும் ஒன்பதாம் அட்டவணையில் முதலாம் மற்றும் இரண்டாம் பட்டியலை திருத்தியமைத்தல்

**2.** இதன் பின்னர் அரசியமைப்புச் சட்டம் எனக் குறிப்பிடப் பட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிய லமைப்புச் சட்டத்தின் -

(அ) 155எ ஆம் உறுப்புரை -

(i) முதலாம் பந்தியின் (ஆ) உபபந்தி நீக்கம் செய்யப்படுவதன் மூலமும்;

(ii) மூன்றாம் பந்தி (இ) உபபந்தியின், "தேசிய பிரிவு மற்றும் மாகாணப் பிரிவு" ஆகிய சொற்கள் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக, "பொலிஸின்" என்ற வசனம் பிரதியீடு செய்யப்படுவதன் மூலமும்,

திருத்தம் செய்யப்படுவதன் மூலமும்,

(ஆ) ஒன்பதாம் அட்டவணையின் முதலாம் பட்டியலில் (மாகாண சபை பட்டியலில்) முதலாவது விடயத்தினை நீக்கம் செய்வதன் மூலமும்;

(இ) ஒன்பதாம் அட்டவணையின் முதலாம் பட்டியலில் (மாகாணசபை பட்டியலில்) முதலாம் பிற்சேர்க்கையினை நீக்கம் செய்வதன் மூலமும்;

(ஈ) ஒன்பதாம் அட்டவணையின் இரண்டாம் பட்டியலின் இரண்டாம் விடயம் (ஓ) பந்தி இரத்துச் செய்யப்படல் மூலமும்,

அரசிலயமைப்பு இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது.

பொலிஸினது மாகாணப் பிரிவு தொடர்பாக ஏதேனும் குளறுபடிகள் ஏற்படுவதைத் தடுத்தல்

**3.** ஏதேனும் தெளிவின்மைகள் இடம் பெறுவதனைத் தவிர்ப்ப தற்காக :-

(அ) பொலிஸில், "தேசிய பிரிவு" மற்றும் "மாகாணப் பிரிவு" என இருத்தல் கூடாது என்பதுடன் அதன் அடிப்படை யில் ஏதேனும் ஒரு எழுத்து வடிவிலான சட்டம் ஒன்றில்

பொலிஸினது, ''தேசியப் பிரிவு'' மற்றும் ''மாகாணப் பிரிவு'' என குறிப்பிடப்படுமெனின் அதன் மூலம் இலங்கைப் பொலிஸ் என அது கருதப்படல் வேண்டும்;

(ஆ) ஏதேனும் ஒரு எழுத்து வடிவிலான சட்டம் ஒன்றில் பொலிஸ் ஆணைக்குழு என குறிப்பிடப்படுமெனின் அதன் மூலமாக 155அ அரசியலமைப்பின் மூலம் அமைக்கப்பட்டுள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழு எனக் கருதப்படல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.